Registered as a Newspaper

கேக் தயாரிப்புக்கேற்ற
தரமான பொருட்களுக்கு
நாடுங்கள்
பெட்டா
எ ச ன் ஸ்
சப்பிளேயர்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

வந்துவிட்டது!
தரமான சுவையுள்ள
(f)புள் கிறீம் (full cream)
மில்க் பவுடர்
பெட்டா
எசென்ஸ்
சப்பிளேயர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ ஆடி மீ 3 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஃ பிறை 22 (19 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 200

# வானத் தாக்குதல் இனி நிறுத்தப்படுமா?

## ஹெலியிலிருந்து சுடுவதையும் தவிர்ப்பதை குறித்துஆலோசனை

—அலுவலகச் செய்தியாளர் கே. இரத்தின ராஜசிங்கம்—

யாழ்ப்பாணம், ஜூலை, 19

வடபகுதியில் வானத் தாக்குதலை முற்றாக நிறுத்துவது குறித்து ஸ்ரீ லங்கா அரசின் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தீவிரமாக ஆலோசித்து வருவதாக அறியவந்துள்ளது.

பொம்பர் தாக்குதல்கள் ஏற்கனவே நிறுத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டிய அந்த வட்டாரங்கள், ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்வதையும் தாம் நிறுத்துவதற்கு உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமான சிபார்சு விரைவில் பந்தோபஸ்து அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்படும் எனவும் அறியவருகிறது.

ஜூன் மாதம் 4ஆம் திகதி இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களைப் போட்டதன் பின்னர் பொம்மர் தாக்குதல்கள் குறைக்கப்பட்டிருந்தன. பின்னர் படிப்படியாக முற்றாக நிறுத்தப்பட்டன.

எனினும் ஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்வது தொடர்கிறது.

ஹெலிக்கொப்டர்தாக்குதல்களையும் நிறுத்தி வானத் தாக்குதல்களை முற்றாக நிறுத்துவது குறித்து பாதுகாப்புப் படை வட்டாரங்கள் ஆலோசித்து வருவதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்திவுத் தேடுதலின் போது

## கர்ப்பிணிப் பெண் உட்பட 7 பேர் கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் இராணுவத்தினர் நடத்திய தேடுதலின் போது கர்ப்பிணிப் பெண் உட்பட ஏழு பேர் கொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது இருபதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். சில வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

இராணுவத்தினரின் தாக்குதலுக்கு அஞ்சி, காடுகளில் தஞ்சமடைந்தோர் தற்பொழுது படிப்படியாக முல்லைத்தீவுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். (இ-10)

## நல்லவை நடைபெறும் பொறுத்திருப்போம்

### என்கிறார் மந்திரி காமினி

கொழும்பு, ஜூலை 19

இன்னும் சில தினங்களில் 'நல்லவை' நடைபெறும். அதுவரை பொறுத்து இருப்போம்.

இப்படி காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

வியாழன் இடம் பெற்ற ஜெயவர்த்தன -டிக்ஸிற் சந்திப்பின் பின்னர் அமைச்சர் இக்கருத்தை கொழும்புச் செய்தியாளர் ஒருவரிடம் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண என்னால் முடிந்த வரை செய்து விட்டேன். இன்னும் சில தினங்களில் நல்லவை நடைபெறும் அதுவரை பொறுத்திருப்போம்-இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

புதுடில்லிக்கு புதிய யோசனைகளுடன் செல்வீர்களா?- என்று கொழும்புச் செய்தியாளர் கேட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிராமோதய சபை

### தலைவர் தேர்தல் 31 இல்

வவுனியா, ஜூலை 19

வவுனியா மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் இருக்கும் 49 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கிராமோதய சபைத் தலைவர் தெரிவுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை 31ம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் மேற்பார்வையில் அவரது உத்தியோகத்தர்களும் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களும் செய்து வருகின்றார்கள்.

தமிழ் சிங்கள பிரிவுகளைச் சேர்ந்த 49 கிராம சேவை அலுவலர்களின் தலைமையிலேயே கிராமோதய சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இத் தேர்தல் நடைமுறை செயற்பாடுகள் தொடர்பாக கிராம சேவை அலுவலர்களுக்கு வவுனியா செயலகத்தில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. (இ-164)

## ஹெலியிலிருந்து போடப்பட்ட அந்த மூடைகள்

நேற்றுப் பிற்பகல் 4 மணி அளவில் பூனகரி கல்முனைக் கடலுக்கு மேலாகப் பறந்த ஹெலிக்கொப்டர் ஒன்றில் இருந்து மூன்று மூடைகள் கடலில் தள்ளப்பட்டன என்று கூறப்படுகிறது.

அவை பிணங்களா? அல்லது ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஏதாவது பொருள்களா? என்று ஐயம் தெரியாமல் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். (இ)

## சுபநேரம்

19-07-1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:-
9.01 முதல் 10.31 வரை
ராகுகாலம்:-
4.31 முதல் 6.01வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி முன்னிரவு 7.08 வரை

## டிக்ஸிற் டில்லிவிரைவு: இலங்கை அரசின் புதிய யோசனையுடன்

கொழும்பு, ஜூலை 19

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் இருந்து புதுடில்லிபுறப்பட்டார்.

பிரதமர் ராஜீவ் காந்திக்கான ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கடிதம் ஒன்றையும் திரு. டிக்ஸிற் கொண்டுசென்றிருப்பதாக யு என்.ஐ செய்தி ஒன்று தெரிவித்தது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இலங்கை அரசின் சமீபத்திய கருத்துக்கள் திரு ஜெயவர்த்தனவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக யு. என். ஐ. செய்தி மேலும் தெரிவித்தது. (இ-ன)

### முச்சந்தி முரளி



என்ன பிரபல புண்ணியன் எல்லாம் ராஜீவை விட்டுப் போகினம். உதாலை வாற பலவீனம் எங்கடை விஷயத்திலையும் தாக்கத்தை உண்டு பண்ணுமோ...?

## அருண்சிங் இராஜினுமா!

புதுடில்லி, ஜூலை 18

இந்தியப் பாதுகாப்பு இணை அமைச்சர் திரு.பி. அருண்சிங் தனது பதவியை நேற்று இராஜினாமாச் செய்துவிட்டார்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் சிபாரிசின் மீது ஜனாதிபதி ஷெயில்சிங், திரு.

( 4ஆம் பக்கம் பார்க்க)

## வீமன்காமம் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலை

காங்கேசன்துறை, ஜூலை, 19

வீமன்காமம் பகுதியில் இராணுவ முன்னேற்றமும், ஹெலி ரோந்தும் நேற்று பெரும் பதற்ற நிலையைத் தோற்றுவித்தன.

வீமன்காமம் டயானி தொழிலகத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக்காலை 9 மணி அளவில் திடீரென தெல்லிப்பளைப் பக்கம் நோக்கி முன்னேற முயன்றனர்.

அச்சமயம் போராளிகளும் எதிர்த் தாக்குதல் நடத்தினர். அரை மணி நேரம் மோதல் இடம் பெற்றது.

பின்னர் இராணுவத்தினர் திரும்பிச் செல்லவே அங்கு வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று மாவிட்டபுரம் வீமன்காமம் தெல்லிப்பழைப் பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டது.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. அயற் கிராமங்களிலும் பதற்ற நிலை ஏற்பட்டு பல பொதுமக்கள் இடம் பெயர்ந்து சென்றனர். (இ-68)

## யாழ் வானொலியை நம்பி போனவருக்கு ஏற்பட்ட அனுபவம்

வடமராட்சி, ஜூலை 19

யாழ்ப்பாணம் வானொலியின் அறிவிப்பை நம்பி வடமராட்சி திரும்புபவர்கள் படையினரின் தாக்குதல், பயமுறுத்தலுக்கு இலக்காகின்றனர்.

யாழ் வானொலி அறிவிப்பைக் கேட்டு விட்டு நேற்றுக்காலை வல்வெட்டித்துறைக்குச் சென்ற ஒருவர் தனது அனுபவம் பற்றித் தெவிப்பதாவது;

வல்வை அம்மன் கோவிலுக்கு அருகில் என் வீடு உண்டு.

யாழ் வானொலியின் அறிவித்தலை நம்பி நான் வீட்டுக்குச் சென்று தங்கி இருந்தேன்.

திடீரென்று இராணுவத்தினர் வீட்டுக்குள் பிரவேசித்தனர். யார் என்று கேட்டனர். வீட்டுச் சொந்தக்காரன் என்று பதிலளித்தேன்.

யார் உன்னை இங்கு வரும்படி அழைத்தது?- என்று சிப்பாய்கள் கேட்டனர்.

திரும்பி வரலாம் என்று யாழ். வானொலியில் அறிவிக்கப்பட்டது என்று நான் சொன்னேன்.

'எவரையும் வரச்சொல்லி நாம் உத்தரவிடவில்லை. திரும்பிப் போ'- என்று சிப்பாய்கள் தெரிவித்தனர்.

மீண்டும் வந்தால் சுடுவோம் என்றும் பயமுறுத்தி என்னைத் தாக்கினர்.

பின்னர் வல்வை முகாமுக்கு அழைத்துச் சென்று இரண்டு மணித்தியாலங்கள் வரை தடுத்து வைத்தனர்.

பிறகு வல்வையை விட்டு வெளியேறும்படி என்னைப் பணித்தனர்.

நான் வல்லை வெளியால் வந்து கொண்டிருந்தேன்.

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியில் புதிதாக முகாமிட்ட இராணுவத்தினர் என்னை மறித்தனர்.

வடமராட்சிக்கு வந்ததற்கான இராணுவ அனுமதிப்பத்திரம் எங்கே என்று அந்த இராணுவத்தினர் என்னைக் கேட்டனர்.

அப்படி ஒன்றும் என்னிடம் இல்லை என்று கூறினேன்.

வடமராட்சி இராணுவத்தின் கடிதம் இன்றி வந்தால் சுடுவோம் என்று என்னை எச்சரித்தனர். பின்னர் என்னை போக அனுமதித்தனர்.

இப்படி உயிர் தப்பி யாழ் வந்த வல்வை வாசி உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ-160)

# வல்லைக்குச் சமீபமாக மற்றொரு மினி முகாம்

வடமராட்சி, ஜூலை 19

வடமராட்சிப் பகுதியின் தென்எல்லைப் பகுதிகளில் ஒன்றாகிய வல்லையை அண்மித்து இராணுவத்தினர் நேற்று புதிதாக மினி முகாம் ஒன்றை அமைத்தனர்.

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியில் 7 ஆம் கட்டைக்குச் சமீபமாக (வல்லை நாற்சந்திக்கு வடக்கில்) அமைந்துள்ள சிறிய பாடசாலையான ஶ்ரீமன் கத்தோலிக்கப் பாடசாலை ஒன்றில் இம்முகாம் நேற்று அமைக்கப்பட்டது.

இம்முகாமுக்குப் பாதுகாப்பு அரண்கள், முட்கம்பி வேலிகள் போடவும், சுற்றுப் புறத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் புல்டோசர் ஒன்று மந்திகை முகாமில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளது.

751 ஆம் இலக்க பஸ்கள் செல்லும் பாதையில் இம் மினி முகாம் அமைந்துள்ளதால் இப் பாதையால் மறு அறிவித்தல் வரை எவ்வித போக்குவரத்தும் மேற்கொள்ளக் கூடாதென சிப்பாய்கள் பஸ் சாரதிகளிடம் தெரிவித்துள்ளனராம்.

தீவிரவாதிகள் வடமராட்சிப் பகுதிக்குள் நுழைய முடியாதவாறு இம்முகாமுடன், மேலும் எட்டு முகாம்கள் இராணுவத்தால் எல்லைப் புறங்களில் அமைக்கப்பட உள்ளன என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி, இமையாணன் குஞ்சர் கடையடி, வல்வை மகளிர் வித்தியாலயம், உடுப்பிட்டி

( 4ஆம் பக்கம் பார்க்க)

## காவலூரில் ஹெலி தாக்குதல்

ஊர்காவற்றுறை' ஜூலை 19

வெள்ளிக்கிழமை காலை ஊர்காவற்றுறைப் பகுதியில் ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டதால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

மக்கள் சிலர் நாரந்தனை புளியங்கூடல் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்தனர்.புனித அந்தோனியார் கல்லூரியும் மூடப்பட்டது' (இ-16)

## அடையாளக் கார்ட் வழங்கும் வேலைகள்

### வடமராட்சியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

வடமராட்சிப் பகுதி மக்களுக்கு விசேஷ அடையாளக் கார்ட் வழங்கும் வேலைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன.

15 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு அடையாளக் கார்ட் வழங்கப்படுகின்றது.

பச்சை நிறத்திலான இந்த அடையாளக்கார்ட் சில மணி நேரத்தில் தயாரித்துக் கொடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று உடுப்பிட்டி, புலோலி பகுதிகளைச் சேர்ந்த ஐம்பதுக்கும் அதிகமானோருக்கு விசேஷ அடையாள கார்ட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்றும் நாளையும் விசேஷ அடையாளக் கார்ட்டுகள் தொடர்ந்து வழங்கப்படும்என யாழ்ப்பாண வானொலி அறிவித்தது.

காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை புலோலி பொலீஸ் நிலையம் சென்று அடையாளக் கார்ட்டைப் பெற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கேகாலைப் பகுதி பொலீஸ் நிலையங்கள் உஷார்

கொழும்பு, ஜூலை 19

கேகாலை மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சிங்களத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு தயாராகும் விதத்திலேயே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொலிஸ் நிலையங்களைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைத்தல், நுழைவாயில்களில் தற்காலிக அரண்கள் அமைத்தல், இரவு வேளைகளில் சக்தி வாய்ந்த மின் பல்புகளைக் கொண்டு வெளிச்சம் ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் பல பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-164)

## 10 மணி நேர ஊரடங்கு தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஜூலை 19

நேற்றிரவு 7 மணியில் இருந்து இன்று அதிகாலை 5 மணிவரையிலான பத்துமணி நேர ஊரடங்கை குடா நாட்டில் அமுல் படுத்துவதாக யாழ்ப்பாண வானொலி நேற்றுப் பகல் தெரிவித்தது.

இம்மாதம் 17ஆம் திகதி தொடக்கம் வடமராட்சிக்கான சகலபோக்குவரத்துச் சேவைகளும் நடைபெறுவதாகவும். வடமராட்சி வழமைக்குத் திரும்பிவிட்டதால் வேறிடங்களுக்கு சென்ற பொதுமக்களும். அரச

(4ஆம் பக்கம் பார்க்க)

## பக்தர்கள் பதற்றம்

அராலி, ஜூலை 19

வெள்ளியன்று இடம் பெற்ற அராலி கிழக்கு மலையாளன்காடு ஐயனார் ஆலய வருடாந்த சங்காபிஷேகத்தின் போது ஹெலி ஒன்று தாழப் பறந்துகோவிலை நோட்டமிட்டபோது பக்தர்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது. (இ-12)

## நெல்லியடி இராணுவ முகாம் இடம் மாறியது

வடமராட்சி, ஜூலை 19

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாம் கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கு இடம மாற்றப்பட்டுள்ளது-

நெல்லியடி மத்திய மாக வித்தியாலயக் கட்டடம் அண்மையில் இடம் பெற்ற தாக்குதலினல் சேதமடைந்தது தெரிந்ததே.

புதிய இராணுவ முகாமின் அமைப்பு வேலைகளை பிரிகேடியர் ரூபசிங்க நேரில் சென்று மேற்பார்வையிட்டார்.

இந்த முகாம் வடமராட்சிப் பகுதியில் இரண்டாவது பெரிய முகாமாக விளங்குகிறது. (இ-7-160)

## துப்பாக்கி வேட்டுக்கு விவசாயி பலி

காங்கேசன்துறை, ஜூலை 19

தமது தோட்டத்தைப் பார்வையிடச் சென்ற விவசாயி ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கு இரையானார்.

நேற்று நடைபெற்ற இச் சம்பவத்தில் இறந்தவர் சின்னத்துரை காங்கேசன் என்னும் 29வயது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நிலைமை பற்றி கேட்டறிந்தார்

சென்னை, ஜூலை 18

ராமேஸ்வரம் வந்தடைந்த இலங்கைத் தமிழ் அகதிகளிடம் யாழ்ப்பாணத்தின் நிலைமை பற்றி தமிழ்நாடு மறுவாழ்வுத் துறை அமைச்சர் இராமசாமி கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சர் இராமசாமி இராமேஸ்வரத்தில் தற்போது தங்கி இருக்கிறார்.

சென்ற வெள்ளிக்கிழமை 56 இலங்கைத்தமிழ் அகதிகள் படகு ஒன்றில் இராமேஸ்வரம் சென்றடைந்தனர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**சின்னஞ்சிறு விளம்பரம்**

**சேவை**

முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ற் தற்போது 168 கோவில் வீதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது கைலாயபிள்ளையார் கோயில் சந்தியிலிருந்து கோவில் வீதி தெற்குப் பக்கமாக நூறு யார் தொலைவில் உள்ளது. (1286)

**ரேனியோ**

பாதுகாப்பான சூழ்நிலையில் சகலவிதமான அச்சு வேலைகளையும் சிறந்தமுறையில் செய்து கொள்ளவும்—ரோனியோ பிரதிகள் நவீன முறையில் செய்துகொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகராச் சந்திக்கு அருகாமை) (3214)


**மூடப்பட்டன**

கொழும்பு, ஜூலை 19

பேராதனைப் பல்கலைக்கழகமும் தும்பற பல்கலைக் கழக வளாகமும் வியாழன் முதல் கால வரையறையின்றி மூடப்பட்டன. (உ-எ)

பிரேமா திரும்பியதும் புதிய யோசனை பற்றி இறுதி முடிவு?

# வடக்கு, கிழக்கு இரண்டுக்கும் ஒரே மாகாணசபை அமைப்பு

## அம்பாறை பிரிக்கப்பட்டாலும் கிழக்காகவே கருதப்படும்

கொழும்பு, ஜூலை 19

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டுக்கும் ஒரே மாகாண சபை அமைப்பது தொடர்பான புதிய யோசனை ஒன்றை இலங்கை அரசு ஆராய்ந்து வருகின்றது.

இந்த யோசனையின் படி வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படமாட்டா.

இனப்பிரச்சினைக்கு மாற்று அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது பற்றி சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதனை அடுத்தே புதிய யோசனை ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

புதிய யோசனை டிசம்பர் 19 யோசனைகளுக்கு வித்தியாசமானதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

அம்பாறை மாவட்டம் கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரிக்கப்படும் அதே வேளையில் அம்பாறைத் தொகுதி தவிர்ந்த கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகள் தற்போது இருப்பது போலவே நிர்வகிக்கப்படும்.

அம்பாறைத் தொகுதியைச் சேர்ந்த சிங்களவர்களும் கிழக்கு மாகாண மக்களாகவே கணிக்கப்படுவார்கள். இந்த யோசனை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் முக்கிய பங்களித்த அரசின் முக்கிய அமைச்சர்களால் ஆராயப்பட்டு வருகின்றது. இது தொடர்பான இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நாடு திரும்பியதும் முடிவு எடுக்கப்படும்.

இனப்பிரச்சினை விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்க மீண்டும் முன் வந்துள்ள இந்தியா இலங்கையிடமிருந்து புதிய யோசனையை எதிர்பார்த்தது தெரிந்ததே. (இ-164)

உறவினர்களைப் பார்ப்பதற்காக

## பூஸா செல்வோருக்கு அனுமதிக் கடிதம்

### செயலகம் வழங்குகின்றது

யாழ்ப்பாணம் ஜூலை 19

பூஸா, காலி, வெலிக்கடை, பெலவத்தை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை குடும்ப அங்கத்தினர் சென்று பார்ப்பதற்கான அனுமதிக் கடிதம் யாழ் கச்சேரியில் வழங்கப்பட்டு வருகின்றது.

ஒரு தடவையில் இரண்டு குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமே சென்று பார்வையிடலாம். குடும்ப அங்கத்தவர் என்பது தாய், தந்தை, சகோதரர்களுடன் கணவன், மனைவி, பிள்ளைகளும் அடங்குவர்.

சென்று பார்க்க விரும்பும் குடும்ப உறுப்பினர்கள் தாம் வசிக்கும் பிரிவின் கிராமசேவையாளர் உதவி அரச அதிபரின் சிபார்சுக்கடிதம், உறவின் தன்மையை விவரிக்கும் சத்தியக் கடதாசி, அடையாள அட்டை ஆகியவற்றுடன் யாழ் கச்சேரிக்கு நேரடியாக வருதல் வேண்டும்.

- இப்படி யாழ் அரச அதிபர் அறிவித்திருக்கின்றார். (உ-எ)

# 'துன்பத்தின் மத்தியில் காணும் இன்பமே மேலான இன்பம்'

## கம்பன் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை. 19

துன்பத்தின் மத்தியில் காண்கின்ற இன்பமே மேலான இன்பம்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற அகில இலங்கைக் கம்பன்கழக 'கம்பன் விழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சியில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் பேசுகையில்; 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்று கூறினான் பாரதி. பாரதி கூறியது போன்று தலை நிமிர்ந்து நிற்க இப்படியான விழாக்களை நடத்தித் தமிழை நன்றாக வளர்க்க வேண்டும். தமிழ் மரபைப்பேணவேண்டும்' என்றார்.

கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை தலைமையில் விழா நடைபெற்றது.

திருவாளர்கள் ஆர். சுந்தரமூர்த்தி, வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமான விழாவை யாழ் தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. சி. சிவமகாராசா, இணுவில் திரு. அரங்கசுவாமிகள், திரு ஆர். சுந்தரமூர்த்தி, திரு. வி. கே. கானமூர்த்தி, திரு. வி. கே. பஞ்சமூர்த்தி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

திரு. நாக. பரமசாமியின் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து திரு. க. குமாரதாசனின் கம்பன் வாழ்த்து இடம் பெற்றது.

இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்தினர்.

காங்கேசன்துறை சிமெந்து ஆலை பொறியியலாளர் திரு. ம. ஜனநாயகம் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையுரை நிகழ்த்தினார்.

பட்டி மண்டப நடுவர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் பட்டி மண்டபத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

இன்றைய சூழலில் எம்மவர் நெஞ்சில் பெரிதும் பதியவேண்டியது சீதையின் உறுதியே என்ற தலைப்பில் திரு.க. நாகேஸ்வரன், திரு. தி. திருநந்தகுமார் ஆகியோரும் சுமித்திரையின் தியாகமே என்ற தலைப்பில் பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை, திரு. ந. கணேசமூர்த்தி ஆகியோரும் கும்பகர்ணனின் வீரமே என்ற தலைப்பில் திரு. ச. ஜெயச்சந்திரன், திரு. ச. சிவகுமாரன் ஆகியோரும் உரையாற்றினர்.

பதிவாளராக வித்துவான் சி. குமாரசாமியும் நோக்கர்களாக திரு. சி. சிவலிங்கராஜா, திரு. எஸ். இராகவன், திரு. டொமினிக் ஜீவா, திரு. நா. சோமகாந்தன், திருமதி சோமகாந்தன், செல்வி புஸ்பா செல்வநாயகம், திருமதி பு. ஞானலிங்கம், திரு. ம. சிவராஜா, திரு. ந. தேவராஜன், திரு. ஈ. ஏகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விவாதத்தில் கும்பகர்ணனின் வீரமே என்ற அணி விலக்கப்பட்டது.

கழகச் செயலாளர் திரு. க. குமாரதாசன் நன்றிநவின்றார். (இ-161)

## 3ஆம்நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம். ஜூலை19

அகில இலங்கைக் கம்பன்கழகம்நடத்தும் மூன்றாம்நாள் கம்பன் விழாவின் காலை நிகழ்ச்சிகள் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தலைமையில் இன்று காலை 9-30மணியளவில்ஆரம்பமாகும்.

திரு. திருமதி செ. நடேசபிள்ளை மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

கடவுள் வாழ்த்து, கம்பன்வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரையையும், பண்டிதர் திரு. க. வீரகத்தி தொடக்கவுரையையும் நிகழ்த்துவார்கள்.

யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் தலைமையுரையை அடுத்து கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் 'எண்களும் பெண்களும்' என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கம் நடைபெறும்.

சாபம் ஒன்று என்பது பற்றி வித்துவான் க. சொக்கலிங்கமும், வாரங்கள் இரண்டு என்பது பற்றி வித்துவான் வஸந்தா வைத்தியநாதனும் சந்தர்ப்பம் மூன்று என்பதுபற்றி பேராசிரியர் அ. சண்முகதாஸும் அற்றவை நான்கு என்பதுபற்றி கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயரும் கருத்துரை வழங்குவார்கள்.

கம்பன் வாழ்த்து, நன்றியுரையுடன் காலை நிகழ்ச்சி நிறைவுறும்.

### மாலை நிகழ்ச்சிகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-30 மணியளவில் மன்னார் முன்னாள் அரச அதிபர் திரு, ஜெகா செந்தில்நாதன் தலைமையில்நடைபெறும்.

திரு. என். கே. பத்மநாதன், திரு. எம். பி. நாகேந்திரம், திரு.ஆர். புண்ணியமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவை 'ஷப்ரு' உதயன் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன் தம்பதிகள் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்கள்.

கடவுள் வாழ்த்து, கம்பன் வாழ்த்தை அடுத்து கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்துவார்.

திரு. சி. தியாகராசா (எஸ்.ரி.ஆர்.) தொடக்கவுரை நிகழ்த்துவார். திரு. ஜெகா செந்தில்நாதன் தலைமையுரை நிகழ்த்துவார்.

மேன்முறையீட்டுப் பட்டி மண்டபம் திருமதி வஸந்தா வைத்தியநாதன், திரு சி வி.கே. சிவஞானம், திரு. இ. முருகையன் ஆகியோரின் நடுவர் ஆயத்தில் நடைபெறும்.

முதல் நாள் பட்டி மண்டபத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு என்னும் பொருளில் வழக்கை பற்றிய பதிவாளர் விளக்கம், நோக்கர்கள் தீர்ப்பால் பாதிக்கப்பட்டவர் முறையீடு, நடுவர் தீர்ப்பால் பாதிக்கப்பட்டவர் முறையீடு, நோக்கர்கள் சார்பில் எதிர்வாதம், வென்றவர் சார்பில் எதிர்வாதம், இறுதித் தீர்ப்பு என்னும் விடயங்கள்நடைபெறும்.

திருவாளர்கள் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், இ. ஜெயராஜ், சோ. பத்மநாதன் ஆகிய மூவரும் முறையே முத்தரப்பு மேலவர்களாகத் தோன்றி வாதிடுவர்.

நன்றியுரை, கம்பன் வாழ்த்துடன் விழா நிறைவுறும். (இ-161)

## செய்திக்கொத்து

### ஜே. வி. பியினர் ஆறு பேர் கைது!

கொழும்பு, ஜூலை 19

தடைசெய்யப்பட்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஆறு இளைஞர்கள் மாத்தளை மாவட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

அரசு எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

### சினைப்பரில் சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூலை 19

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சினைப்பர் தாக்குதலில் யாழ் கோட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் எச். பி. பிரேமரட்ன பண்டார உயிரிழந்தார் என்று அரச தரப்பு அறிக்கை ஒன்று கூறுகிறது. (உ-எ)

### முல்லைத்தீவில் தேடுதல்

கொழும்பு, ஜூலை 19

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமையும் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

தேடுதல் பணியில் ஈடுபடும் ஆயுதப்படையினர் முல்லைத்தீவுப் பகுதியில் அரச கட்டடங்கள் சிலவற்றில் தங்கியிருக்கின்றனர். (உ-எ)

### வயோதிபர் சுட்டுக் கொலை!

நாவலடி, உடுப்பிட்டி என்னும் இடத்தைச் சேர்ந்த கே. கனகன் (வயது 80) என்னும் வயோதிபர் இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற்படி நபர் தனது வீட்டின் பிற்பக்கத்தில் கட்டி நின்ற கால்நடைகளுக்கு உணவு வைக்கச் சென்றபோது வீட்டு வேலியைப் பிரித்து வந்த இராணுவத்தினர் அவரைச் சுட்டுக் கொன்றதாக அறியப்படுகின்றது. (உ-160)

### கைதிகள் தப்பி ஓட்டம்

கொழும்பு, ஜூலை 19

காவலில் வைக்கப்பட்டு இருந்த இரண்டு ஜே. வி. பி பிரமுகர்கள் தப்பியோடிய சம்பவம் ஒன்று தொடர்பாக பொலீஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒழுங்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

இந்தப் பொலீஸ் அதிகாரி குருணாகல மாவட்டத்தில் பணியாற்றிய போதே இரண்டு சந்தேகநபர்களும் தப்பி ஓடினர்.

பொலீஸ் அதிகாரி கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன் அவரின் பதவித் தரமும் குறைக்கப்பட்டது.

## வெல்லமுடியாத யுத்தத்துக்கு நிதி ஒதுக்குவதை நிறுத்துங்கள்

-- ரெனி

கொழும்பு, ஜூலை 19

வெல்ல முடியாத யுத்தத்துக்கு நிதி ஒதுக்குவதைக் கைவிடும்படி ஜனாதிபதி, பிரதமர், தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வேண்டுகோளை விடுத்தவர் நிதி அமைச்சர் ரெனிடிமெல்.

இத்தகவலை நிதி அமைச்சரே கடந்த வியாழன் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இம் மாநாட்டுக்கு வருவதற்கு முன்னர் பண்டுவஸ்நுவர எம்.பி. திரு. கே. எம். பி. ரத்நாயகா, நிதி அமைச்சரைச் சந்தித்து தனது தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கும்படி கோரினார்.

வெல்ல முடியாத யுத்தத்துக்கு நிதி கேட்க வேண்டாம் என்றுதேசிய பாதுகாப்பு அமைச்சரிடம் சொல்லுங்கள். நான் உங்கள் தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு அதிக நிதி தருவேன்-

-இப்படி நிதி அமைச்சர், பண்டுவஸ்நுவரஎம். பியிடம் தெரிவித்தார்.

பாரிஸில் உலக வங்கி முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச விழிப்பு நிறுவனம், நோர்வே சர்வதேச சமாதான ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் என்றும் நிதி அமைச்சர் ரெனி டி மெல் தெரிவித்தார்.

[நிதி அமைச்சரின் செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்பட்ட தகவல்களில் ஒரு பகுதி ஏற்கனவே உதயனில் வெளிவந்திருந்தது] (உ-எ)

## மக்கள் முகம்

### பலாலி ஆசிரிய கலாசாலை தமிழ் மன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

பலாலி ஆசிரிய கலாசாலையின் புதிய மாணவர்கள் வரவேற்பு விழாவும் 'தமிழ் மன்ற' பொதுக்கூட்டமும் அண்மையில் கலாசாலை அதிபரும் மன்றபோசகருமாகிய திரு. ந. கனகேஸ்வரன் தலைமையில் கோப்பாய் 'சப்த மண்டபத்தில்' நடைபெற்றன.

நடப்பு வருட உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- செல்வி ம. மயில்வாகனம், உபதலைவர்:- திரு.பொ. பாலச்சந்திரா, செயலாளர்:- திரு. த. இன்பநேசன், உப செயலாளர்:- திரு. சு. வஸ்தியாம்பிள்ளை, பொருளாளர்:- செல்வி சி. சுமதி, உபபொருளாளர்:- திரு. அ. புவனேந்திரராசா.

14 பேர் கொண்ட நிர்வாக சபைக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ)

### இலவச பஸ்சேவை

வடமராட்சி ஜூலை 19

வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது பழைய இடங்களுக்குத் திரும்புவதற்கு இலவச பஸ் வசதியை இராணுவத்தினர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றனர்.

பரந்த அளவில் இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்கள் தமது சொந்த இடமான வடமராட்சிக்குச் செல்வதற்கே இத ஏற்பாடு.

இந்த இலவச சேவையில் செல்ல விரும்புபவர்கள் தாம் இருக்கும் அகதிகள் முகாமில் இருந்து அத்தாட்சிப் படுத்தப்பட்ட பத்திரங்களுடன் வடமராட்சிக்கு மட்டும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். (உ-160)

## இலங்கை மின்சார சபை

# கேள்விப் பத்திரம் கோரல்

### உபயோகிக்கப்பட்ட வாகனங்களின் விற்பனை

கீழ்க்காணும் மோட்டார் வாகனங்கள் விற்பனைக்கு உள்ளன.

| | வாகன எண் | மாதிரி | நிறுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| 1 | 33ஸ்ரீ4989 | மொறிஸ் ஒஸ்ரின் லொறி | திருகோணமலை பிரதேச அலுவலகம் |
| 2. | சிவி 3401 | பெட்வோட் ,, | ஹிங்கிராக்கொட பணிமனை |
| 3. | 5ஸ்ரீ2180 | மிஸ்சுபிசி ஜீப் | சுன்னாகம் பிரதேச களஞ்சியம் |
| 4. | 5ஸ்ரீ1319 | மிஸ்சுபிசி ஜீப் | ,, ,, |
| 5. | 24ஸ்ரீ3663 | மொறிஸ் பிாம்சி லொறி | ,, ,, |
| 6. | 25ஸ்ரீ6730 | மிஸ்சுபிசி ஜீப் | சாவகச்சேரி பணிமனை |
| 7. | 24ஸ்ரீ7486 | பெட்வோட் லொறி | வடபகுதி முகாமையாளர் அலுவலகம், அனுராதபுரம். |

கேள்விகள் முத்திரை பொறித்த தபாலுறையில் அனுப்பப்படல் வேண்டும். அத்தபால் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் ''உபயோகிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான கேள்விகள்'' எனக் குறிப்பிட்டு, பகுதி முகாமையாளர் (வடக்கு) இலங்கை மின்சாரசபை, மைத்திரிபால சேனநாயக்கா மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு 1987 ஆவணி 5 ஆம் திகதி காலை 10-00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சேரக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

அனைத்துக் கேள்விகளும் தலா ரூபா 500/- (ஐந்நூறு) வீதம் ஒவ்வொரு வாகனத்துக்கும் மீளளிக்கக்கூடிய பாதுகாப்பு வைப்புப் பணமாக, பொது முகாமையாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கியாணையுடன், அல்லது காசுக் கட்டளையுடன் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களும் பெறும் போது, மீளளிக்கப்படாத ரூபா 25/- (இருபத்தைந்து) இற்கான காசுக்கட்டளையோ, வங்கியாணையோ இலங்கை மின்சாரசபைப் பொது முகாமையாளரின் பெயரில் பெற்று வழங்கப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரப் படிவங்கள் மின்னேரியா, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாண இலங்கை மின்சாரசபைப் பிரதேச அலுவலகங்களிலும், அநுராதபுர வடபகுதி முகாமையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம். குறித்த வாகனங்களை முன்னட்டவணையில் குறித்த இடங்களில் அலுவல் நாட்களில் காலை 08-30 க்கும் மாலை 16-00 க்கும் இடையில் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரதாரர்கள் காசாக முழுக் கொடுப்பனவையும் செய்து, கேள்வியை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் வாகனங்களைக்கொண்டு செல்லல் வேண்டும்.

கேள்விகள் மேற்குறித்த அலுவலக கேள்விப்பத்திரங்களில் மட்டுமே அமைதல் வேண்டும்.

இலங்கை மின்சார சபை,
மைத்திரிபாலசேனநாயக்க மாவத்தை,
அநுராதபுரம்,
1987-07-16.

பகுதி முகாமையாளர்
(வடக்கு)


மலிவு விலையில் புடவை

**கையிருப்பு அகற்றல்**

* வெள்ளைப் பப்ளின்
* கலர் பப்ளின்
* சீத்தை

என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பிட்ட தொகையே கையிருப்பிலுண்டு.

ப. நோ. கூ. சங்கம், சிறு உடுப்புகள் தயாரிப்போருக்கு விசேஷ கழிவு உண்டு.

**றேட் சென்ரர்**
**ஹோம் பினன்ஸ் லிமிட்டட்**

155, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

வானமும் பூமியும் ஒழிந்து போகும். என் வார்த்தைகளோ ஒழிந்து போவது இல்லை.
—பைபிள்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
19.07.1987 க.பெ.இல: - 23

# வெங்கட்ராமனிடம் எதிர்பார்ப்பது...!

இந்தியா உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு. பண்டைய வரலாற்றுச் சிறப்பும், நாகரிகம் பண்பாட்டுக் கீர்த்தியும் நிறைந்தது பாரதநாடு. நவீன காலத்தின் மூன்றுவது சக்தி மிக்க நாடாகவும் மிளிர்கின்றது அது.

அந்தப் பெருமைக்குரிய நாட்டின் மகத்துவம் நிறைந்த உயர் பதவிக்கு தமிழர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். தமிழகத்தில் சுத்தமான தமிழுக்குப் பெயர் பெற்றது தஞ்சாவூர். அங்கு பிறந்த திரு. இராமசாமி வெங்கட்ராமன் இந்திய நாட்டின் மிக மிக உயர்ந்த பதவியான ஜனாதிபதி பதவிக்குத் தெரிவாகி உள்ளார். ஈழத் தமிழர் சார்பில் அவருக்கு எமது வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. வெங்கட்ராமன் காந்திய தத்துவங்களில் ஈடுபாடுகொண்டவர். இந்திய சுதந்திரத்துக்காக நடந்த போராட்டங்களில் தமது இளமையில் மிகத் தீரத்துடனும், தீவிரத்துடனும் செயற்பட்டவர். சிறந்த தொழிற்சங்கவாதியாகவும், புகழ் பெற்ற வழக்கறிஞராகவும் விளங்கியவர்.

அரசியலில் ஈடுபட்டு மக்களுக்காக உழைக்கத் தொடங்கிய காலம் தொட்டு, தொண்டனாகவும், நேர்மையாளனாகவும் விளங்கி வருபவர்.

தமிழகத்தில் அமைச்சராகப் பதவி வகித்தவர் அவர். அங்கு கைத்தொழில் துறை வளர்வதற்குப் பெரும் பங்காற்றியவர் என்றும் பாராட்டப்படுபவர்.

அவரது ஆற்றலும், அறிவும் இனங்காணப்பட்டு இந்தியாவின் மந்திரி சபையில் மிக முக்கிய பதவிகளான நிதிமந்திரி, பாதுகாப்பு மந்திரி பதவிகள் வழங்கப்பட்டன. பின்னர் அவர் இந்தியாவின் உப ஜனாதிபதியாகவும் உயர்த்தப்பட்டார்.

இந்தியாவின் மூத்த அரசியல் வாதிகளில் ஒருவராக விளங்கும் திரு. வெங்கட்ராமனுக்கு ஜனாதிபதிப் பதவி எல்லா வகைகளாலும் பொருத்தமானதே என்று சகல தரப்பாரும் பாராட்டி இருப்பது அவரின் ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஈழத் தமிழர்கள் பல சஞ்சலங்கள், ஆபத்துக்கள், அட்டூழியங்கள், அக்கிரமங்கள் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். எனினும் தாய் நாடான பாரதத்தின் உயர் தலைவனாகத் தமிழன் ஒருவன் தெரிவாகி உள்ளான் என்பது கேட்டு அவர்களின் நெஞ்சங்கள் இறும்பூதெய்துகின்றன. இன உணர்வு (உணர்ச்சி அல்ல) அவர்களின் இரத்தத்தில் பாய்ந்து, இந்த இக்கட்டான நிலையிலும் அவர்களைப் பரவசம் அடைய வைத்திருக்கிறது.

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் நடந்த 'கறுப்பு ஜூலை' சம்பவங்கள் உலகத்தையே உருக வைத்தவை. அவ்வேளை இந்தியாவில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் திரு. வெங்கட்ராமன். இலங்கைக்கு இராணுவம் அனுப்பவேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தினால் அவ்வேளை முன் வைக்கப்பட்டது.

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை திரு. வெங்கட்ராமன் அப்போது தீர்க்க தரிசனத்துடனும், நிதானத்துடனும் விளக்கியிருந்தார்.

இலங்கைக்கு இராணுவம் அனுப்பப்படல் வேண்டும் என்ற குரல் இப்போது மீண்டும் வலுத்து வருகிறது. கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி மக்கள் ஆட்சி மன்றங்களும் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தத்தொடங்கி உள்ளன.

இவ்வேளையில் இந்திய ஜனாதிபதியாகத் திரு. வெங்கட்ராமன் பதவி ஏற்கிறார்.

கடந்த நான்கு வருடங்களாக ஈழத்தமிழர்கள் படும் இன்னல்களை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதில் இந்தியாவுக்குப் பெரும் பங்கு உண்டு. அமெரிக்கா உட்பட உலகம் முழுவதுமே அதனை ஒப்புக்கொள்கின்றன.

இந்தியாவின உயர் பதவியில் அமரும் தமிழரான திரு. வெங்கட்ராமன், தமது இன்னல்களைக் களைவதற்கு, பிரதமர் ராஜீவுக்கு பக்கத்துணையாகவும், உந்து சக்தியாகவும் விளங்க வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும். எல்லாம் நல்லதாக நடக்க காலம் கைகூடுவதாகுக!

## வடமராட்சி மக்களுக்கு தனியான அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடமராட்சிப் பகுதி மக்களுக்கு இராணுவத்தினர் தனியான அடையாள அட்டைகளை வழங்கவுள்ளனர்.

15 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட அப் பகுதி மக்களுக்கு இராணுவத்தினரால் விசேடமாக தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் அடுத்தவாரம் முதல் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

✦ ராஜீவ் கூறுகிறார்

# கட்சியைப் பலவீனப் படுத்தும் முயற்சியில் பல சக்திகள் ஈடுபாடு

## வெங்கட்ராமனுக்கே முட்டுக்கட்டை போட முயற்சி நடந்தது

புதுடில்லி, ஜூலை 18

இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் உள்ளே இருந்தும் வெளியே இருந்தும் பல சக்திகள் ஈடுபட்டுள்ளன. எமது அணிசேரா, சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையை உலகின் எந்தச் சக்தியாலும் அழிக்க விடமாட்டோம்.

இப்படி பிரதமர் ராஜீவ் தெரிவித்தார்.

புதுடில்லியில் கடந்த வெள்ளிக்கிழமைதிரண்ட ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் பிரதமர் இப்படி கூறுரைத்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் வேட்பாளருக்கு அமோக வெற்றியை ஈட்டிக் கொடுத்ததற்காக திரு. காந்தியைப் பாராட்ட இவர்கள் திரண்டிருந்தனர்.

பிரதமர் மேலும் சொன்னதாவது;

திரு. வெங்கட்ராமன் ஜனாதிபதியாவதைத் தடுக்கும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டன. அதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. சந்தர்ப்பம் வரும் போது வெளியிடுவேன்.

1977 — 1980 களில் அன்னை இந்திராவுடன் சேர்ந்து இயங்கியவர்கள் கூட இன்று அச்சக்திகளுடன் அணி திரண்டுள்ளனர். இதை அறியும் போது வருத்தமடைகின்றேன்.

அன்னை இந்திராவை சிறையில் வைக்கவும் அவர் மீது விசாரணை நடத்த கமிஷன்களை நியமிக்கவும் தீவிரமாக ஈடுபட்டவர்கள் தான்



ராஜீவ் காந்தி

இன்று காங்கிரஸுக்குள் பிளவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பண்டிதர் ஜவஹர்லால் நேருவுக்கு எதிராகவும் இதே சக்திகள் மும்முரமாக அன்று செயற்பட்டன.

எவ்வளவு நிர்ப்பந்தங்களைக் கொடுப்பினும் எமது அணிசேரா, சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையை விட்டுக் கொடுக்கமாட்டோம்.

தற்போதைய பாதையில் இருந்து நாம் விலகிச் செல்லப் போவதும் இல்லை.

இப்படி பிரதமர் தெரிவித்தார்.

இதனிடையில் ஜனாதிபதி தேர்தலில் திரு. வெங்கட்ராமன தெரிவானது, பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமைக்குக் கிடைத்த வெற்றி என்று ரஷ்ய அரசு பத்திரிகை ''பிராவ்தா'' கருத்து வெளியிட்டு உள்ளது.

பிரதமர் காந்திக்கு எதிராக இயங்கும் சக்திகளுக்குக் கிடைத்த பெரும் தோல்வி இது என்றும் ''பிராவ்தா'' மேலும் எழுதியது. (இ-எ)

## பாதுகாப்பு வழங்கும்படி வி- பி- சிங்--முகமட் கான் சபாநாயகரிடம் விண்ணப்பம்

புதுடில்லி, ஜூலை 18

தங்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கை எடுக்கும்படி முன்னாள் அமைச்சர்கள் வி.பி.சிங், ஆரிப் முகமட்கான் ஆகியோர் சபாநாயகரிடம் விண்ணப்பித்துள்ளனர்.

ஆரிப்முகமட்கான் மீது வெள்ளி மாலை நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, அவரின் இல்லத்துக்கு அருண் நேரு, வி. பி. சிங் ஆகியோர் சென்று பார்த்தனர்.

அதன் பின்னர் திரு. கானும் திரு. வி. பி. சிங்கும் நாடாளுமன்ற சபாநாயகர் பல்ராம் ஜாக்கரை நேரில் சந்தித்தனர்.

தாக்குதல் சம்பவம் பற்றி சபாநாயகரிடம் தெரிவித்தனர்.

தங்களுக்குப் பாதுகாப்பு வழங்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி இருவரும் சபாநாயகரிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். (இ-எ)

# வி.பி.சிங்கின் ராஜினமா கடிதத்தைஏற்க மறுப்பு

புதுடில்லி, ஜூலை 18

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் விஸ்வநாத் பிரதாப் சிங்கின் ராஜினமாக் கடிதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டி அறிவித்துள்ளது.

திரு. சிங்கின் ராஜினமாக் கடிதம் நிபந்தனையுடன் கூடியது அதனால் அக்கடிதத்தைக் கட்சிக் காரியக் கமிட்டி நிராகரித்துவிட்டது—

இப்படி கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஜி. கே. மூப்பனார் வெள்ளிக்கிழமை இரவு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் காந்திக்கு எழுதிய கடிதத்தில்,

'நான் கட்சியில் தொடர்ந்து இருப்பது கட்சியின் நலனுக்குப் பாதகமானதாக இருக்கும் என்று நீங்கள் கருதினால் கட்சியில் இருந்தும் ராஜ்ய சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் ராஜினமாச் செய்யும் இக்கடிதத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்' — என்று திரு. வி. பி. சிங் தெரிவித்திருந்தார். (இ-எ)

**வெளி உலகில்**

முன்னாள் மந்திரி தாக்கப்பட்டதை

## பி. பி. சி. செய்தியாளர் நேரில் கண்டாராம்

புதுடில்லி, ஜூலை 18

முன்னாள் மத்திய அமைச்சர் ஆரிப் முகமட்கான், இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவைச் சேர்ந்த தொண்டர்கள் கோஷ்டியினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை பி. பி. சியின் புதுடில்லிச் செய்தியாளர் சதிஷ் ஜேக்கப் நேரில் கண்டார்.

பிரதமர் காந்தியினால் இந்திரா காங்கிரஸில் இருந்து கடந்த வியாழன் வெளியேற்றப்பட்டவர்களில் ஆரிப் முகமட்கானும் ஒருவர்.

அவரைப் பேட்டிகாண பி. பி. சி. செய்தியாளர் சதிஷ் ஜேக்கப், புதுடில்லி இல்லத்துக்குச் சென்று இருந்தார்.

வெள்ளிக்கிழமைமாலை இப்பேட்டி இடம்பெற்றது.

பேட்டி முடிந்த பின்னர் பி. பி. சி. செய்தியாளர் தான் கண்டவற்றைக் கூறுகிறார்.

பேட்டி முடிந்து நான் வெளியேவர முயன்ற போது, இந்திரா காங்கிரஸ் கொடியைப் பிடித்தபடி ஒரு கோஷ்டி ஆரிப் முகமதுகானின் இல்லத்துக்குள் நுழைந்தது.

ஆரிப் முகமட்கானுக்கு எதிராகக் குரல எழுப்பினார்கள்.

பின்னர் அவரைஇழுத்துப்போட்டு அடித்தார்கள். அந்த நேரத்தில் வீட்டினுள் இருந்து கானின் ஆதரவாளர்கள் வெளியே வந்தனர்.

இருதரப்பினருக்கும் இடையே கைபரிமாறல்கள் இடம்பெற்றன.

அச்சமயம் உள்ளேபுகுந்த கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் ரிவால்வரை எடுத்து ஆகாயத்தை நோக்கிப் பலமுறை சுட்டார்.

இப்படி பி. பி. சி. செய்தயாளர் தெரிவித்தார். (இ-எ)

## ஆயுதஇறக்குமதி வர்த்தகரின் வீடுகள் சோதனை

புதுடில்லி, ஜூலை 18

ஆயுத இறக்குமதியில் ஈடுபடும் பதினறு வர்த்தகர்களின் வீடுகளை இந்திய வருமான வரி அதிகாரிகள் திடீர் சோதனையிட்டனர்.

இந்தியாவின் பல முக்கிய நகரங்களில் கடந்த வெள்ளிக்கிழமை இத்திடீர் வேட்டை இடம்பெற்றது.

ஆயுத இறக்குமதி பற்றிய தஸ்தாவேஜுகள் மற்றும் ஆவணங்கள் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இவற்றை விட பல லட்ச ரூபாய்கள்பெறுமதியான தங்க பிஸ்கெட்டுக்களும் கைப்பற்றப்பட்டன.

சுமார் 700 வருமானவரி அதிகாரிகள் இந்த நடவடிக்கையில ஈடுபட்டனர்.

புதுடில்லியில் மட்டும் 70 இடங்களில் இத்தேடுதல் இடம் பெற்றது. (இ-எ)

இஸ்லாமிய அரசியல் நடவடிக்கை முன்னணி அறிக்கை:

# தென் இலங்கை அரசியல் வாதிகள் வடக்கே விஜயம் செய்ய வேண்டும்;

## அப்போது தான் உண்மை நிலை தெரியவரும்

கொழும்பு, ஜூலை 19

தென் இலங்கை அரசியல்வாதிகளை வட பகுதிக்கு நேரில் சென்று வடக்கில் நடைபெறுவதைப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் உண்மை நிலை தெரியவரும்.

—இஸ்லாமிய அரசியல் நடவடிக்கை முன்னணியின் தூதுக்குழு ஒன்று அதன் தலைவர் டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீன் தலைமையில் வடபகுதிக்கு அண்மையில் விஜயம் செய்தது.

அக்குழு கொழும்பு திரும்பியதும் வடபகுதி நிலைமை பற்றி அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப் பட்டிருப்பதாவது;

தென் இலங்கையில் இடம்பெறும் வன்செயல்கள் பற்றி சிங்கள அரசியல்வாதிகள் பெரிதாகக் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் வடபகுதிக்கு ஒரு முறை விஜயம் செய்து பார்க்கவேண்டும்.

வடபகுதியில் மக்கள் தினமும் பெரும் எண்ணிக்கையில் உயிரிழக்கின்றனர்; ஜீவ மரணப் போராட்டம் நடத்துகின்றனர்.

கல்மனதையும் உருக்கும் சம்பவங்கள் வடபகுதியில் இடம் பெறுகின்றன.

வட பகுதியில் நிலைமை பற்றி தென் இலங்கை அரசியல் கட்சித் தலைவர்கள், ஜனாதிபதி, பாதுகாப்புஅமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர், முன்னாள் பிரதமர், முன்னாள் அமைச்சர்கள் ஆகியோரைச் சந்தித்து தெரிவிக்க உள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சில முக்கிய விஷயங்களில் உறுதியான நிலைப்பாட்டைக கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் பேச்சுவார்த்தைக்கு இணங்க முடியாத பிடிவாதப் போக்குக் கொண்டவர்கள் அல்லர்.

இது எம் தெளிவான கருத்து.

பேச்சுக்களுக்கு முன்னர் தமிழர்களின் பாதுகாப்பு, சுதந்திரம் ஆகியவற்றுக்கு உத்தரவாதம்அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அப்படி நடைபெறின் இந்திய மத்தியஸ்தத்தில் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளைக் கலந்து கொள்ள இணங்க வைக்கலாம் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுளளது.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## அனுமதி அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை19

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஜி.சி.ஈ. உயாதர வகுப்பு மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று ஞாயிறுக் கிழமை காலை 10-00 மணிக்கு கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கப்படும் என்று அதிபர் ரூய் காந்தராஜா அறிவித்துள்ளார். (உ)

யாழ் மாநகரசபையின்

## சுகாதாரப் பகுதி சுறுசுறுப்பாக இயங்குமா?

குருநகர், ஜூலை 19

யாழ்-மாநகர சபையின் சுகாதாரப் பகுதி மீண்டும் சுறுசுறுப்புடன் செயற்படுமா?

—இப்படி கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி குடாநாட்டிற்கான எரிபொருள் விநியோகம் தடை செய்யப்பட்டதை அடுத்து குப்பை ஏற்றும் லொறிகளும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் குப்பை கூளங்களைத் தீயிட்டுக் கொளுத்துமாறு அல்லது குழிகளைத் தோண்டிப் புதைக்குமாறு மாநகர சபையால ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் வீதிகளில் போக்குவரவுக்குத் தடையாக குப்பை கூளங்கள் நிரம்பி வீதிகள் சீரழிந்தன.

ஆனால் தற்போது குடாநாட்டிற்கான எரிபொருள் தடை நீக்கப்பட்டும் இன்னமும் வீதிகள் குப்பை கூளங்களினால் நிரம்பி வழிகின்றன. (உ-ர)

## தலையிட கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

டாக்டர்களின் வேலை நிறுத்தத்தில் உடனடியாகத் தலையிட்டு தீர்வு காணும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுளளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கமே இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றது. (உ-எ)

## போராட்ட ஜெபம்

'வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப்போராட்டமுண்டு' (எபேசியா6:2)

'விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாசப் போராட வேண்டும்' (யூதா 3-ம் வசனம)

ஜெபத்திலே நாம் கர்த்தரோடு நின்று கொண்டு, சாத்தானை எதிர்த்துப் போராட வேண்டிய சந்தாப்பங்களும் வருகிறது நமக்கு

ஞானக்கதிர்

போராட்டமுண்டு என்றும, நாம் போராட வேண்டும் என்றும் வேதம் நமக்கு எச்சரிக்கிறது!

தானியேல் புத்தகத்தின் பத்தாம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். தானியேல் ஜெபித்த முதல் நாளிலேயே அவன ஜெபம் கேட்கப்பட்டு, தேவதூதன் பதிலையும் எடுத்து வந்தான். (தானி 10;12) ஆனால பெர்சிய தேசத்தை ஆளுகை செய்து வந்த அந்தகார லோகாதிபதி, அந்த தேவதூதனுடபோராடி எதிர்த்து நின்றான். ஒரு நாளல்ல இரண்டு நாளலல, இருபத்தொரு நாட்கள்.

தானியேலும் தனது ஜெபத்தில் சளைத்து விடவில்லை! ஒரே ஊக்கத்தோடு ஒரே உறுதியாய் வானமண்டலத்தின் அந்தப் பொல்லாத ஆவியோடு போராடியதால், மிகாவேல்தூதன் உதவியாக வந்தான். ஆகவே ஜெபத்தின் பலனையும், கடைசிநாளில சம்பவிக்கப் போகும் சம்பவங்களின் ரகசியங்களையும் தானியேல் பெற்றுக் கொண்டார்.

இன்று நம் தேசத்தை



மட்டுமல்ல; கிராமங்களையும், பல வீடுகளையுமே இந்த அந்தகார கோலாதிபதிகள் ஆளுகை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே நாம் மன்றாடுவதை நிறுத்தி விடவே கூடாது. தேசத்தின் எழுப்புதலுக்காக தொடர்ந்து ஜெபிப்போமாக! தேசத்தின் வரைபடத்தை மனக்கண்கள் முன் நிறுத்தி கிறிஸ்துவின் இரத்தத்தை தேசத்தின் மேல் தெளிப்போமாக. ஜெயம் நமக்கே!

நினைவிற்கு:— 'நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்' (எபே 6:11)

## மாணவர்களுக்கு அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம், ஜூலை19

வடமராட்சிப் பகுதியில் ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதிபத்திரங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டன. (உ-7)



**பொய்யாமொழி**

**குறள்:**

அற்றுரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

**பொருள் :**

சுற்றத்தாரின் தொடர்பு அற்ற வரை நம்பித் தெளிதல் கூடாது; அவர்கள் உலகத்தில் பற்று இல்லாதவராகையால் பழிக்கு நாணமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வழமையான இடத்தில்
✯ ராஜ் கோபால்ஸ் ✯
திருமண வைபவங்களுக்கு ஏற்ற
பட்டு பிடவைகளைப் பெற்றுக்கொள்ள
ராஜ் கோபால்ஸ்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

19-07-1987 ஞாயிற்றுக்கிழமை

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஒற்றையாட்சி முறைக்கு பங்கமில்லாத வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு

## ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 19

தற்போதைய அரசமைப்புக்கு அமையவும் ஒற்றையாட்சி முறைக்கு பங்கமில்லாத வகையிலுமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் நேற்று நடைபெற்ற ஜாதிக சேவக சங்கமயவின் 20 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தன பேசினார்.

அப்போதே அவர் இதனை வெளியிட்டார். அவர் மேலும் சொன்னதாவது;

இனப்பிரச்சினைக்குத் தீர்வு அரசமைப்புக்கு அமையவும் நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கக் கூடியதாகவும் காணப்படும்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றி எத்தகைய முடிவு எடுக்கப்பட்டாலும் அது ஒற்றையாட்சி முறைக்கு பங்கமில்லாத வகையில் இருக்கும்.

**சுயாட்சி வழங்கப்படும்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி அந்தஸ்த்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு ஐக்கியத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் தீவிரவாதிகள் அதை முறியடிப்பதில் ஈடுபடுகின்றனர்.

தீவிரவாதிகளுக்கு இந்தியா முதலில் ஆதரவளித்து வந்தது. இப்போது ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரை சில பிரச்சினைகள் எதிர் நோக்கியுள்ளன.

-இப்படி ஜனாதிபதி சொன்னார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி பேசுகையில்:

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதால்தான் அரசியல் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை இன்று ஏற்படக் கூடியதாகஇருக்கின்றது. அரசியல் தீர்வு காணக் கூடிய வாய்ப்பு ஒன்று உருவாகியுள்ளது'— என்று தெரிவித்தார்.

## இந்தியா மறுப்பு

புதுடில்லி, ஜூலை 19

கராச்சிக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு இந்தியாவே பொறுப்பு என்று பாகிஸ்தான் பிரதமர் விடுத்த குற்றச்சாட்டை புதுடில்லி வெளிநாட்டமைச்சு வன்மையாக மறுத்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமரின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்றும் புதுடில்லி கண்டித்திருக்கின்றது. (இ-எ)

## ✯ அவசர விவாதம்

நியூயோர்க், ஜூலை 16

சுமார் ஒரு வருடங்களாக நடந்து வரும் ஈராக் - ஈரான் யுத்தத்தில் உடனடிப் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான புதிய யோசனையை ஐ நா. பாதுகாப்பு சபை திங்கட்கிழமை அவசரமாக விவாதிக்கும்.

பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களும் இந்த விவாதத்தில் கலந்து கொள்வர். (அ)

# பெரிய நாடான இந்தியாவுடன் வாழ பழகிக்கொள்ள வேண்டும்

—ரொனி

கொழும்பு, ஜூலை 19

பெரிய நாடான இந்தியாவுடன் வாழ நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் சொன்னார்.

ஹோமகமவில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் மேலும் சொன்னதாவது:

உலகம் எமக்கு உதவத் தயாராக இருக்கின்றது. ஆனால் நமது நாட்டில் முதலில் அமைதி திரும்ப வேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கின்றது.

தற்போது போகும் போக்கில்போய்க்கொண்டிருந்தால் நாடே குட்டிச் சுவராகிவிடும், எமக்கு விருப்பமோ, இல்லையோ பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வு ஒன்றை நாம் கண்டேயாக வேண்டும்.

உலகில் எமது நாட்டில் பூகோள அமைப்பை நாம் மாற்றிவிட முடியாது. பெரிய நாடான இந்தியாவின் அயலில் தான் நமது நாடு இருக்க வேண்டும். ஆகவே இந்தியாவுடனான உறவுகளை வளர்ப்பதற்கு சாத்தியமான சகலதையும் நாம் மேற்கொள்ளவேண்டும்.

நாம் விரும்பினாலும்சரி இல்லை என்றாலும்சரி இந்தியாவின் உதவியுடன் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது.

பெரிய நாடான சோவியத் யூனியனின் அருகில் சிறிய பின்லாந்து மக்கள் நல்லபடி நட்புறவுடன் வாழ முடியும் என்றால் இந்தியாவுடன் நாம் ஏன் வாழ முடியாது?

இப்படி அமைச்சர் ரொனி டி மெல் தெரிவித்தார். (இ-எ)

# மல்லாகத்தில் உணவு முத்திரை விநியோகம்

மாவிட்டபுரம் கிராம சேவகர் பிரிவு மக்களுக்கான வறுமை நிவாரணம் - உணவு முத்திரைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மல்லாகத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.

இக் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு இரு வார நிவாரண உதவி 24 ஆம் திகதி வழங்கப்படும்.

பளை - வீமன்காமம் கிராம சேவகர் பிரிவு மக்களுக்கான இருவார நிவாரண உதவி 20ஆம் திகதியும் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் 22 ஆம் திகதியும் வழங்கப்படும்.

மயிலிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவு மக்களுக்கான இருவார நிவாரண உதவி 26ஆம் திகதி வழங்கப்படும்.

இவ்விவரங்களை கிராம சேவையாளர் திரு. க. இராசதுரை தெரிவித்தார். (இ-68)

VACANCY FOR
MECHANICAL ENGINEER
Walk In Interview

We are looking for a Mechanical Engineer with Engineering Degree or equivalent for immediate engagement for our vast expanding Engineering Company

Please call for an interview on 22nd July 1987 at 9-3 a.m. in our Company Office with all your certificates and documents.

Promoters Engineering Company always look for quality.

We say it and our customers confirm this.

PROMOTERS
ENGINEERING COMPANY LTD.
844, Point Pedro Road,
NALLUR - JAFFNA.
(3216)

பிரயாண ஒழுங்கு

✯ சவூதி ✯ குவைத்

★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ கார் சாரதி
★ கூலியாட்கள்

ஆகியனவற்றுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

அத்துடன் பாஸ்போட், பொன்ட், இந்தியன் விசா, ரிக்கட் ஆகியன எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகொள்வோர் 20ஆம் திகதிக்கு முன்பு தொடர்புகொள்ளவும்.

விபரங்களுக்கு:-

K. K. அம்பிகாபதி,
கலைமணி வீதி, கட்டப்பிராய். (1292)

LONDON EXAMS. Nov. Dec.1987

★ புதிய வகுப்புகள் ஆரம்பம்
★ C. I. M. A. Stage II
25 . 7 . 87 காலை 8-30 மணிக்கு
★ I. A. B. INTER & FINALS
22-7-87 காலை 9-30 மணி

தகுதியான விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படும்.

RESULT ORIENTAL INSTITUTE IN NORTH

North Ceylon Technical Institute
14, St. Peters Lane,
JAFFNA.
(3223)

Medical Laboratory Technologist

Closing date for Application Bio Data and Curriculum Vitae extended till 15-8-87 as requested by Out Station candidates.

DIRECTOR,
MATERNITY AND NURSING HOME,
MARKET SQUARE,
CHANKANAI.
(1283)

## கல்வித் திணைக்களத்தில் ஜீ. சி. ஈ. அனுமதிப்பத்திரம்

வட்டுக்கோட்டை, ஜூலை 19

வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்துள்ள. வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவிகள் நாளை 20ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வருகை தந்து தத்தமது பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை கல்லூரி அதிபரிடம் நேரடியாகப் பெற்றுக் கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளனர்.

இதுவரை இடம்பெயராது வடமராட்சியில் வசிக்கும் மாணவிகள் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியில் அதிபரிடம் நேரடியாக அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-161)

## ஹென்றி பெரேரா இறந்தால் சடலம் யாழ் மருத்துவக் கல்லூரிக்கு

கொழும்பு, ஜூலை 19

வெலிக்கடைச் சிறையில் நான் கொல்லப்பட்டால் யாழ்ப்பாணம் மருத்துவக்கல்லூரிக்கு எனது சடலத்தை ஒப்படையுங்கள்.

இப்படி உடுவரகே ஹென்றி பெரேரா, கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்ட ஹென்றி பெரேராவுக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யூ சேனநாயக்கா கடந்த வியாழன் பத்து ஆண்டுக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது தெரிந்ததே.

தண்டனை வழங்கப்படும் முன்னர் எதிரிக் கூண்டில் நின்றபடிவாக்குமூலம் ஒன்றை அளிக்க அனுமதி தரும்படி ஹென்றி பெரேரா கோரினார்.

நீதிபதி அனுமதி வழங்கினார். அதன் பின்னர் நீண்ட வாக்குமூலம் ஒன்றை ஹென்றி பெரேரா அளித்தார். அப்போது ஹென்றி பெரேரா சொன்னதாவது:

அரச பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படும் முதல் நபரும் கடைசி நபரும் நான் அல்லன்.

இன்னும் ஆயிரக்கணக்கானோர் இப்படித் தண்டிக்கப்படுவர்.

தாய்நாட்டின் விடுதலைக்காக நடத்தும் போராட்டத்தில் அவர்கள் இறக்கலாம்

சிறையிலும் பலர் கொல்லப்பட்டனர். நானும் சிறைக்குள் கொல்லப்படுவேன். இது நடக்கக்கூடிய காரியம். அப்படி கொல்லப்பட்டால் எனது சடலத்தை யாழ்ப்பாணம் மருத்துவக் கல்லூரிக்கு கையளிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக்கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படி ஹென்றி பெரேரா சொன்னார்.

ஹென்றி பெரேரா, புளொட்இயக்கத்தின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## உணவு முத்திரை மற்றும் உத்தரவுப் பத்திரம் பெறுதோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம் ஜூலை 19

வண்ணார் பண்ணை தென் கிழக்கு கிராம சேவை அலுவலகர் பிரிவுக்குரிய மக்கள் இதுவரை இரண்டாம் கட்ட வறுமை நிவாரணஉணவு முத்திரையோ, பாதிக்கப்பட்டோருக்கான உத்தரவுப் பத்திரமோ பெறாது இருந்தால் இம்மாதம்22ஆம்திகதி புதன் கிழமைக்கு முன்பு ஆனைப்பந்தி சந்தியில் உள்ள கிராம சேவை அலுவலகர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கிராம சேவையாளர் திரு. வி. சே. தளையசிங்கம் கேட்டுள்ளார்.

இரண்டாம் கட்ட வறுமை நிவாரணஉணவு முத்திரை விநியோக வேலையும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உத்தரவு பத்திர விநியோக வேலையும் பூர்த்தி அடைந்து விட்டதாகவும் அவற்றை மேற் குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் பெற்றுக்கொள்ளத் தவறினால் அவை யாழ் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார் (இ-10)

## கடலோடிகள் மூவரும் விடுதலை

குருநகர், ஜூலை 18

கடந்த மாதம் பிற்பகுதியில் நெடுந்தீவுக்கு அப்பால் ஆழ்கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட கடலோடிகள் மூவரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் வாசிகளான அந்த மூவரும் மூன்று வாரங்களுக்கு முன்பாக தமிழகத்திற்கு அகதிகளை ஏற்றிச் சென்று விட்டுத் திரும்பி வருகையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டிருந்தனர். (இ)

Diploma in Nursing
தாதிப் பயிற்சி நெறியில்
டிப்புளோமா
7-ஆம் பகுதிக்கான விரிவுரைகள்
ஆரம்பம்:- 1st August 1987
North Ceylon Technical Institute
14, St. Peters Lane,
Jaffna.

● காணவில்லை



சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

பலாலியைச் சேர்ந்தவரும், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (முத்தையா) (55 வயது) என்பவர் 23-04-87 இல் பருத்தித்துறைக்குச் சென்று அங்கு காணாமல் போய்விட்டார்.

மனநோயாளியான இவர் மெலிந்த, உயர்ந்த தோற்றமுடையவர். இவரைப் பற்றிய தகவல் ஏதும் தெரிந்தால் பலாலி புனித ஆரோக்கிய மாதா கோவிலுடன், அல்லது அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயப் பங்குத் தந்தையுடன், அல்லது வேறு கிறீஸ்தவ தேவாலயப் பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்.

புனித ஆரோக்கிய மாதா
கோவிலடி,
பலாலி வடக்கு, வயாவிளான்.

தகவல்:-
தா. சுரை
(1289)

## அருண்சிங்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அருண்சிங்கின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டார்.

ஏற்கனவே இந்திரா காங்கிரஸ் எம். பியான திரு. அமிதாப்பச்சன் தனது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். (இ-எ)

## வல்லைக்கு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அமெரிக்கன் மிஷன் ஆண்கள் பாடசாலை, வியாபாரி மூலை போன்ற இடங்களிலும் சிப்பாய்கள் மினி முகாம்களை அமைத்துள்ளனர்.

நெல்லியடித் தாக்குதலை அடுத்து இந்த மினி முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (இ-119-7-160)

## வானத் தாக்குதல்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அறியப்படுகிறது.

எனினும் இந்த ஆலோசனையை பந்தோபஸ்து அமைச்சும்- அரசாங்க உயர் வட்டாரமும் அங்கீகரித்தால்மட்டுமே அது அமுலுக்கு வரும். இவ்வாறு பாதுகாப்புப் படை வட்டாரங்கள் கூறியதாக கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் மூலம் அறிய வருகிறது.

இதேவேளை, வடமராட்சியில் இரண்டாவது தாக்குதலின் போது பொம்மர்கள் பாவிக்கப்படவில்லை என்றும்-

ஹெலியிலிருந்தே ரொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும்- பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது.

## நல்லை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டார்.

'அதற்குத்தான் இந்தியத்தூதர் இருக்கின்றாரே' -என்று அமைச்சர் திஸநாயக்கா பதில் அளித்தார்.

நியாயமான வழிமுறை பிரச்சினைக்குத் தீர்வு காண தயாரிக்கப்படலாம் என்று நம்பிக்கை ஏற்பட்டுள்ளது-

இப்படி அரசு உயர் மட்ட வட்டாரம் ஒன்று தெரிவித்ததாக பி.பி.சி. நியூஸ் செய்தி வெளியிட்

## அடையாள...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

றுக் கொள்ளலாம் எனவும் யாழ்ப்பாண வானொலி மேலும் தெரிவித்தது. (எ-10)

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## 10 மணி நேர..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அதிகாரிகளும், வர்த்தகர்களும் தத்தமது இடங்களுக்குத் திரும்பி வரும்படி வானொலி கேட்டுக்கொண்டது.

## துப்பாக்கி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விவசாயி ஆவார்.

கொல்லங்கலட்டி கிளாலை என்னுமிடத்தில் உள்ள தமது தோட்டத்தைப் பார்வையிட்டு வருவதற்காக இவர் சென்ற சமயம் ஹாபர்வியூ இராணுவ முகாம் பக்கமிருந்து வந்த துப்பாக்கி வேட்டு இவரின் உயிரைப் பலி கொண்டது. (இ-68)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 19-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Sunday July 19 1987 Registered as a Newspaper at the General Post Office under number QI/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org